அரக்கோணம் நகராட்சி

சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண். 26 நாள் 26.05.2018.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 31.05.2018 விழாயன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

அரக்கோணம் நகராட்சி 31.05.2018 வியாழன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல்/2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

---

**பொருள் எண் :02**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை—05 அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.13149/2018/UGSS-2-1 நாள்.24.05.2018ல், அரக்கோணம் நகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கான 7600 வீட்டு இணைப்புகள் மதிப்பீடு ரூ.5.10 கோடியில் மேற்கொள்ள கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை நகர மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ( ரூ.கோடியில்) | நிதி ஆதாரம் |
|---|---|---|---|
| 1. | **சிப்பம் – I** மண்டலம் -I மற்றும் III பகுதிகளில் உள்ள 7600 குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல் | 5.10 | TUFIDCO Loan (Interest Free Loan) |
| | **மொத்தம்** | **5.10** | |

**அலுவலக குறிப்பு:**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி பணிக்கு தலைமைபொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்**
3. **ஒப்பந்தப்புள்ளியை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

---

**பொருள் எண் :03**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை—05 அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.13149/2018/UGSS-2-2 நாள்.24.05.2018ல், அரக்கோணம் நகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கான 6800 வீட்டு இணைப்புகள் மதிப்பீடு ரூ.4.60 கோடியில் மேற்கொள்ள கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை நகர மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ( ரூ. கோடியில் ) | நிதி ஆதாரம் |
|---|---|---|---|
| 1. | **சிப்பம் – II** மண்டலம் -IA மற்றும் II பகுதிகளில் உள்ள 6800 குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல் | 4.60 | TUFIDCO Loan (Interest Free Loan) |
| | **மொத்தம்** | **4.60** | |

**அலுவலக குறிப்பு:**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி பணிக்கு தலைமைபொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்**
3. **ஒப்பந்தப்புள்ளியை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

---

**பொருள் எண் :04**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை–05 அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.13149/2018/UGSS-2-3 நாள்.24.05.2018ல், அரக்கோணம் நகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கான 5600 வீட்டு இணைப்புகள் மதிப்பீடு ரூ.3.75 கோடியில் மேற்கொள்ள கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை நகர மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ( ரூ.கோடியில்) | நிதி ஆதாரம் |
|---|---|---|---|
| 1. | **சிப்பம் – III** வார்டு எண்.01 முதல் 36 வரையில் உள்ள விடுப்பட்ட 5600 குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல் | 3.75 | TUFIDCO Loan (Interest Free Loan) |
| | **மொத்தம்** | **3.75** | |

**அலுவலக குறிப்பு:**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி பணிக்கு தலைமைபொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்**
3. **ஒப்பந்தப்புள்ளியை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

---

**பொருள் எண் :05**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான TN–73 T- 4896 க்கு புதியதாக இரண்டு எண்கள் டயர்கள் பொருத்த உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் | டயர் ஒன்றிற்கான விலை (ரூ) |
|---|---|---|
| 1. | விஜய லஷ்மி ஏஜென்ஸிஸ்<br>எண்.183–184, சோளிங்கர் ரோடு,<br>அரக்கோணம் –631001. | 6000.00 |
| 2. | G.N ஏஜென்ஸிஸ்<br>எண்.169/170, சோளிங்கர் ரோடு,<br>அரக்கோணம். | 6250.00 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள விஜய லஷ்மி ஏஜென்ஸிஸ் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1494/2013/இ1**

---

**பொருள் எண் :06**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தொழில்புரிவோர்க்கு தொழில்வரி **01.10.2013** முதல் **5** ஆண்டுகளுக்கு **25%** உயர்வு செய்திட நகரமன்ற தீர்மான எண்.**969** நாள்.**20.02.2014**ல் மன்றத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டது தற்பொழுது தொழில்வரி உயர்வு செய்யப்பட்டு **5** ஆண்டுகள் முடிவடையும் தருவாயில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.Roc No:**12503/2018/R1** நாள் **21.05.2018**ல் தொழில் வரி **25%** க்கு குறையாமலும் அதிகபட்சமாக **35%** மிகாமலும் உயர்வு செய்து கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட விவரப்படி **25%** உயர்வு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு பெறப்பட்டுள்ளது. (மன்றத் தீர்மானம் எண்.**357** நாள்.**31.05.2018**)

| வ. எண். | அரையாண்டு வருமானம் | ஏற்கெனவே 01.10.2013ல் முதல் உள்ள அரையாண்டு தொழில் வரி தொகை ரூ. | 01.10.2018 முதல் திருத்திய அரையாண்டு தொழில்வரி தொகை (25% உயர்வு) |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | ரூ 21000 வரை | இல்லை | இல்லை |
| 2 | ரூ 21001 முதல் 30000 வரை | ரூ.118/– | ரூ.148/– |
| 3 | ரூ 30001 முதல் 45000 வரை | ரூ.294/– | ரூ.368 /– |
| 4 | ரூ 45001 முதல் 60000 வரை | ரூ.586/– | ரூ.733/– |
| 5 | ரூ 60001 முதல் 75000 வரை | ரூ. 879/– | ரூ.1099/– |
| 6 | ரூ 75001 க்கு மேல் | ரூ.1173/– | ரூ.1250/– |

மேற்படி **25%** தொழில்வரி உயர்வு செய்யும் போது, Article 276, clause (2) Constitution of India ல், ஒருநபரால் செலுத்தப்படும் தொழில்வரியானது ஆண்டுக்கு ரூ.**2500/–**க்கு மிகாமல் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொழில்வரி **25%** உயர்வு செய்யப்பட்ட பட்டியலில் வரிசை எண்–**6**ல் குறிப்பிடப்பட்டுள்ள அரையாண்டு தொழில்வரி உயர்வுத் தொகை ரூ.**1466/–**ஐ ரூ.**1250/–** ஆக நிர்ணயம் செய்யப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**பொருள் எண் :07**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான TN–73 W- **5969**க்கு புதியதாக இரண்டு எண்கள் டயர்கள் பொருத்த உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் | டயர் ஒன்றிற்கான விலை (ரூ) |
|---|---|---|
| 1. | விஜய லஷ்மி ஏஜென்ஸிஸ்<br>எண்.**183–184**, சோளிங்கர் ரோடு,<br>அரக்கோணம் –**631001.** | **6000.00** |
| 2. | G.N ஏஜென்ஸிஸ்<br>எண்.**169/170**, சோளிங்கர் ரோடு,<br>அரக்கோணம். | **6250.00** |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள விஜய லஷ்மி ஏஜென்ஸிஸ் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1494/2013/இ1**

---

**பொருள் எண் :08**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 78,395 மக்கள்தொகை மற்றும் இந்நகருக்கு வந்து செல்லும் மக்கள் (Floating Population) தொகையால் இந்நகரில் தினமும் சுமார் 28 மெட்ரிக் டன் ஆளவிற்கு திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகள் தற்பொழுது சில்வர் பேட்டையில் உள்ள உரக்கிடங்கில் ( சுமார் 10.58 ஏக்கர் பரப்பளவு) கொட்டப்பட்டுவருகிறது. தற்பொழுது நகராட்சியில் உள்ள 63 தள்ளுவண்டிகளின் மூலம் சுமார் 25% வீடுகளில் திடக்கழிவுகள் மட்கும் மட்காத குப்பைகள் எனப்பிரித்து வாங்கப்படுகிறது. நகரில் உருவாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய சுமார் 2.5 மெட்ரிக் டன் (9 விழுக்காடு) திடக்கழிவுகளான பிளாஸ்டிக், ரப்பர், பிளாஸ்டிக் பாட்டில்கள், துணிகள், தேங்காய் ஓடுகள் மற்றும் மரங்கள் ஆகியவற்றினை கையாளுவதிலும் மேலும் அப்புறப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. இவற்றினை பாதுகாப்பாக கையாண்டு வெளியேற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 11.05.2018 அன்று நடைபெற்ற ஆய்வுகூட்டத்தில் ஆலோசித்தபோது மேற்கண்ட எரியக்கூடிய தன்மை வாய்ந்த திடக்கழிவுகளை கடலூர் மாவட்டத்தில் உள்ள 5 நகராட்சிகளும் ( கடலூர், பண்ருட்டி, நெல்லிக்குப்பம், சிதம்பரம் மற்றும் விருத்தாச்சலம் ) அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் எரிபொருளாக பயன்படுத்துவதற்காக வழங்குவதால் அந்நிறுவனத்துடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கலாம் எனத்தெரிவித்ததை தொடர்ந்து மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பேசியபோது நாளொன்றுக்கு 250 மெட்ரிக் டன் எரியக்கூடிய திடக்கழிவுகளை கையாளக்கூடிய அளவில் தங்களிடம் திறன் இருப்பதாகவும் இதுசம்பந்தமாக அந்நிறுவனத்துடன் 10 ஆண்டுகாலத்திற்கு எரியக்கூடிய திடக்கழிவுகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட நகராட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டால் திடக்கழிவுகளை நகராட்சியின் செலவில் நகராட்சி வாகனங்களில் ஏற்றி அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் வந்து தர வேண்டும் எனவும் மேற்கண்ட எரியக்கூடிய திடக்கழிவுகளை நகராட்சி இலவசமாக தரவேண்டும் எனவும் நிபந்தனை தெரிவித்தனர். இதுசம்பந்தமான மாதிரி புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையும் கொடுத்துள்ளனர்.

அரக்கோணம் நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய 2.5 மெட்ரிக் டன் திடக்கழிவுளை கையாளுவதும் அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் பல்வேறு சிரமங்கள் உள்ளன. எனவே அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றிட மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிறுவனத்துடன் 10 ஆண்டுகொலத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளவும் அதற்காக விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி சொந்த பொறுப்பில் இந்நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. **அரக்கோணம் நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் எரியக்கூடிய தன்மையுள்ள 2.5 மெட்ரிக் டன் திடக்கழிவுகளை கையாளுவதிலும் மற்றும் பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட்**

நிறுவனத்திற்கு விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி வாகனத்தில் கொண்டு சென்று வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

2. பத்தாண்டு காலத்திற்கு அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு திடக்கழிவுகளை வழங்குவதற்கு அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 629 / 2017 /எச்1**

---

**பொருள் எண் :09**

அரக்கோணம் நகராட்சிக்கு உட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் பொதுமக்களின் நலன் கருதி சிமெண்ட் சாலை பழுது பார்த்தல், மழைநீர் கால்வாய் பழுது பார்த்தல், உயர்கோபுர மின் விளக்குகள் பராமரித்தல், குடிநீர் விநியோக பைப்லைன் பராமரித்தல், பூங்கா பராமரித்தல் போன்ற பணிகளை செய்ய கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.21ல் உள்ள தியாகி சின்னசாமி தெரு மற்றும் Hume Pipe Road இணைப்பில் உள்ள சாலை பழுதடைந்துள்ளதை சரிசெய்தல். | 3.50 |
| 2. | நகராட்சிக்கு சொந்தமான இரட்டைக்கண் வாராவதியின் தெற்கு மற்றும் வட புறங்களில் சிறுபாலங்களின் மேற் பகுதிகள் மற்றும் உள்புறம் உள்ள சிமெண்டு சாலை பழுதுதடைந்துள்ளதை சரிசெய்தல். | 1.10 |
| 3. | வார்டு எண்.21 ராஜேந்திர கிரிசிங் நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் பழுதினை சரிசெய்தல் | 2.40 |
| 4. | நகராட்சிக்கு சொந்தமான உயர்கோபுர மின் விளக்குகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய உபகரணங்கள் மற்றும் Timer, Relay Switch, Liffting Motor ஆகியவற்றை பொருத்தி இயக்குதல் | 7.00 |
| 5. | அரக்கோணம் நகராட்சியில் 86.216 கி.மீ குடிநீர் விநியோக பைப்லைன் மற்றும் குடிநீர் பம்பிங் மெயினில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் | 9.90 |
| 6. | வார்டு எண்.06ல் உள்ள காமராஜ் நகர் பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காவிற்கு சுற்றுச்சுவர் அமைத்தல். | 3.20 |
| 7. | நகரில் உள்ள பூங்காக்களில் Onsite Compost கட்டமைப்பு ஏற்படுத்துதல். | 8.00 |

**அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்**

**பொருள் எண் :10**

நகராட்சிக்கு சொந்தமான சில்வர்பேட்டை உரக்கிடங்கில் (Compost yard) துய்மை இந்தியா திட்டத்தின் கீழ் BIO –MINING (பையோ – மைனிங்) முறையில் குப்பைகளை பரித்தேடுத்து ஆய்வு செய்து அவ்விடத்தின் பரப்பு கொட்டப்படும் குப்பைகளின் அளவு ‘Volumetric Test’ செய்வதற்கும்

தொழில் நுட்ப நிபுணர் 'Consultant' நிர்ணயம் செய்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் | விலை (ரூ) |
|---|---|---|
| 1. | M/S J P சர்வேஸ் & கன்சல்டன்ஸ்<br>சென்னை – 40 | 51000/– |
| 2. | M/S கிரிட்லைன் சர்வேஸ் அன்டு ஜியோபஷியல் பிரைவேட் லிட்,<br>சென்னை –28 | 45000/– |
| 3. | M/S ஒரியண்ட் சர்வேஸ்<br>சென்னை–15 | 48000/– |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/S கிரிட்லைன் சர்வேஸ் அன்டு ஜியோபஷியல் பிரைவேட் லிட் சென்னை – 28அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

---

**பொருள் எண் :11**

அரக்கோணம் நகராட்சிக்கு உட்பட்ட காந்திரோடு ஒடியன் மணி திரையரங்கம் அருகில் உள்ள 300 mm C1 பைப்லைன் சாலையின் நடுப்பகுதியில் உள்ளது. இதன் வால்வு தொட்டிகளும் (2 எண்கள்) சாலையின் நடு பகுதியில் உள்ளதால் அப்பகுதியில் கனரக வாகனங்கள் மூலம் அடிக்கடி சேதம் ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்துக்கும் குடிநீருக்கும் மிகவும் சிரமப்படுகின்றார். எனவே, மேற்படி பணியை செய்ய மதிப்பீடு ரூ.8.00/– இலட்சித்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணி குடிநீர் அவசர அவசியத்தை முன்னிட்டு போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டி நகராட்சிகளின் சட்ட விதி 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. P.வீரராகவன் அவர்கள் மூலம் பணியை செய்யவும் மன்றத்தின் பாவைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

---

**பொருள் எண் :12**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான சில்வர்பேட்டை உரக்கிடங்கில் குப்பைகள் முழுவதும் உள்ளதால் நகராட்சி குப்பைகளை உட்புரமாக சென்று Dump செய்ய இயலாமல் உள்ளது. எனவே, மேற்படி குப்பைகளை அகற்று சுத்தம் செய்ய மதிப்பீடு ரூ.3.40/– இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகராட்சிகளின் சட்ட விதி 1920 பிரிவு 15ன் கீழ் விரைந்து செய்ய வேண்டி நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. V. சதீஷ் குமார் அவர்கள் மூலம் பணியை செய்யவும் மன்றத்தின் பாவைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

---

**பொருள் எண் :13**

அரக்கோணம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக குழாய்கள் தற்போது நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளால் பழுது ஏற்பட்டு குடிநீர் கழிவு ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களின் குடிநீர் தேவை பூர்த்தி செய்ய இயலாமலும், குடிநீரில் கால்வாய் நீர் கலந்தும் உள்ளது. இதனால், காலரா போன்ற தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. எனவே, குடிநீர் விநியோக பைப்லைனை சரி செய்ய மதிப்பீடு ரூ.6.00/– இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணி குடிநீர் பணி என்பதால் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு போர்க்கால அடிப்படையில் செய்து முடிக்க வேண்டி நகராட்சிகளின் சட்ட விதி 1920 பிரிவு 15ன் கீழ் பணியை நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. V. சதீஷ்குமார் அவர்களின் மூலம் பணியை விரைவாக செய்யவும் மன்றத்தின் பாவைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

---

**பொருள் எண் :14**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான கல்லாறு நீரேற்றும் நிலையத்தில் இருந்து நகருக்கு குடிநீர் பெறப்பட்டு வரும் 200 mm CI பைப்லைனை நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான ஆற்றும் பாலம் வழியாக அமைந்துள்ளது. தற்போது நெடுஞ்சாலை துறையினரால் பாலம் புதியதாக கட்டப்பட உள்ளதால் புழக்கத்தில் உள்ள பாலம் உடைக்க உள்ளனர். எனவே கல்லாறு நீரேற்றும் நிலைய பைப்லைனை உடனடியாக அகற்ற வேண்டியுள்ளது. எனவே, மேற்படி பணிக்கு மதிப்பீடு ரூ.50000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது மேலும், பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டி நகராட்சிகளின் சட்ட விதி 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. R. சண்முகம் அவர்கள் மூலம் பணியை செய்யவும் மன்றத்தின் பாவைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

---

**பொருள் எண் :15**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் நீரேற்றும் நிலையத்திலிருந்து நகருக்கு குடிநீர் பெறப்பட்டு வரும் 4.50 mm CI பிரதான குழாய் கல்லாறு அருகில் உடைப்பு ஏற்பட்டு உள்ளது. இதனால் நகரில் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே, மேற்படி உடைப்பை சரி செய்ய மதிப்பீடு ரூ.1,80,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது மேற்படி பணி குடிநீர் அத்தியாவசிய பணி என்பதால் பணயின் அவசர அவசியத்தை முன்னிட்டு போர்க்கால அடிப்படையில் பணியை செய்ய வேண்டிய நகராட்சிகளின் சட்ட வதி 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. R. சண்முகம் அவர்கள் மூலம் பணியை செய்யவும் மன்றத்தின் பாவைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :16**

அரக்கோணம் நகராட்சி **2018–2019** ஆம் ஆண்டிற்கான ஒப்பந்த அடிப்படையில் நகராட்சி பகுதி களில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு Out Sourcing முறையில் **14** தற்காலிக பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த நகரமன்ற தீர்மான எண் **76** நாள் **28.02.2018–**ல் அனுமதி பெறப்பட்டு மக்கள் செய்தி தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் வேலூர் அவர்களின் மூலம் வேலூர் மாவட்ட தமிழ் நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை விளம்பரம் செய்யப்பட்டு 28.03.2018 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்றைய தினம் நிர்வாக நலன் கருதி தேதி குறிப்பிடாமல் ஒப்பந்தப்புள்ளி ஒத்திவைக்கப்பட்டது. எனவே திரு.G.ரவி ஒப்பந்ததாரர் பணி உத்திரவு **31.03.2018** தேதியுடன் முடிவடைவதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஏற்கனவே 14 தற்காலிக பணியாளர்களை வழங்கி வரும் திரு.G.ரவி, ஒப்பந்ததாரர், அவர்களின் மூலம் ஏப்ரல் 2018 ஒரு மாதம் மட்டும் ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான செலவின தொகை ரூ.1.60 லட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண் 336 நாள் 30.04.2018 அனுமதி பெறப்பட்டு 18.04.2018 வரை பணிபுரிந்து வந்தனர். எனவே பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஏற்கனவே 14 தற்காலிக பணியாளர்களை வழங்கி வரும் திரு.G.ரவி, ஒப்பந்ததாரர், அவர்களின் மூலம் 01.06.2018 தேதி முதல் 31.08.2018 வரை ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான செலவின தொகை ரூ.5.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: 2018–2019 ஆம் ஆண்டிற்கு 14 பணியாளர்களின் மூலம் நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை 01.06.2018 தேதி முதல் 31.08.2018 வரை ஏற்கனவே 14 தற்காலிக பணியாளர்களை வழங்கி வரும் திரு.G.ரவி, ஒப்பந்ததாரரின் மூலம் பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தவும் உத்தேச செலவின தொகை ரூ.5.00 லட்சம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**